**செய்தி வெளியீடு எண்: 360** **நாள் : 04.07.2013**

தமிழ்நாடு அரசு
செய்தி மக்கள் தொடர்புத் துறை,
எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனம்,
சென்னை–600 113

<u>செய்தி வெளியீடு</u>

திரைப்படத் துறை மற்றும் தொலைக்காட்சித் துறையில் மிகச் சிறந்த தொழில்நுட்ப வல்லுநர்களையும், இயக்குநர்களையும் உருவாக்கி வரும் எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனம். கடந்த ஐம்பது ஆண்டுகளாக, சென்னை தரமணியில் தமிழக அரசின் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் கீழ் சிறப்புடன் இயங்கி வருகின்றது.

இந்தியாவிலேயே முதல் முறையாக திரைத்துறையின் மாற்றத்திற்கேற்ப புதிய தொழில் நுட்பங்களை பயிற்றுவிக்கும் விதமாக, இந்நிறுவனத்தில் வரும் கல்வியாண்டிலிருந்து (2013 –2014 ) உயிர்ப்பூட்டல் **(Diploma in Animation and Multimedia Technology**) மற்றும் காட்சிப்பயன் **(Diploma in 3D Animation and Graphics)** எனும் இரண்டு பாடத்திட்டங்கள் துவங்கப்படவுள்ளன.

மேற்குறிப்பிட்ட பாடப் பிரிவுகளில் சேர்ந்து, கலைத்துறையில் தங்களின் கலை ஆர்வத்தை வளர்த்துக் கொள்ள விரும்பும் மாணவ/மாணவியர், இதற்கான விண்ணப்பப் படிவங்களை, 05.06.2013 நாளிட்ட நாளிதழ்களில் வெளிவரும் விளம்பரங்களைப் பார்த்தும் தமிழக அரசின் "www.tn.gov.in" என்ற இணையதள முகவரியில் இருந்து படியிறக்கம் செய்தும் விண்ணப்பிக்கலாம்.

உயிர்ப்பூட்டல் **(Diploma in Animation and Multimedia Technology**) மற்றும் காட்சிப்பயன் **(Diploma in 3D Animation and Graphics)** எனும் இரண்டு பாடத்திட்டங்களுக்கு மாணவ/மாணவியர் சேர்ந்து பயில்வதற்கான காலஅவகாசம் 15.07.2013 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. எனவே, மாணவ/மாணவியர்களின் நலன் கருதி, கால அவகாசம் நீட்டிக்கப்பட்டுள்ளதை பயன்படுத்தி இந்த புதிய பாடப்பிரிவுகளில் சேர்ந்து பயிலவிரும்புவோர் 15.07.2013–க்குள்ளாக விண்ணப்பித்து பயன்பெறுமாறு இயக்குநர் செய்தி மக்கள் தொடர்புத் துறை அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**